மூலமாக முழுக்க முழுக்க வெளிநாடுகளுக்கு மீன் அனுப்ப வேண்டுமென்ற முறையில் சென்னை, தூத்துக்குடி துறைமுகங்கள் விரிவுபடுத்தப்பட்ட பிறகு திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

* 282 வினு.—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கோட்டை அகழியில் மீன் வளர்க்க, அதனை விற்க தமிழ்நாடு அரசு மத்திய அரசின் அனுமதி பெற்றுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) வேலூர் கோட்டை அகழி, 1919-ஆம் ஆண்டிலிருந்து அதாவது 1904-ஆம் ஆண்டு பண்டைச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட சின்னம் என்று இக்கோட்டை அறிவிக்கப் படுவதற்கு முன்பே, மாநில மீனவந்துறையின் உடைமையாக இருந்து வருகிறது, அதனுல் பயன்படுத்தப்பட்டும் வருகிறது. அவ்வகழியில் மீன்களை வளர்க்கவோ அல்லது அவற்றை விற்கவோ இந்திய அரசின் அனுமதி பெறப்படவில்லை, அது அவசியமுமில்லை. இவ்வகழியைப்பழுதுபார்ப்பதற்கும் மேம்பாடுகள் செய்வதற்கும் மட்டுமே, இந்திய அரசின் தொல்பொருள் துறையின் இசைவு தேவைப்படும். ஏனெனில், அகழிக்குப் பழுது பார்க்கும் பணியும் மேம்பாடுகள் செய்யும் பணியும் தொல்பொருள் கோட்பாடுகளுக் கிணங்க நிறைவேற்றப்பட வேண்டும்.

Industrial Licences

* 283 *Q*.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the industrialist J. R. D. Tata who met the Chief Minister as the end of December 1969 at Madras expressed full support to the State's demand that Industrial Licensing powers should be progressively transferred to the State Government ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை, உரிமங்கள் பெறுவதிலும் நிறைவேற்றுவதிலும் உள்ள பல்வேறு இடர்பாடுகளை அவர் தெரிவித்தார்.

[1972 ஆகஸ்ட் 23

Dr. H. V. HANDE : May I know whether this Government discussed any details about starting of any industires in Tamil Nadu? If so may I know the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குறிப்பிட்ட எந்தத் தொழிலைப் பற்றியும் விவாதிக்கவில்லை. பொதுவாகத் தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றி விவாதித்தோம்.

திரு. எம். சுரேந்திரன் : தொழில்களைப் படிப்படியாக அரசாங்கம் எடுத்துக் கொள்வதில் 5 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனமுள்ள தொழில்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறதா அல்லது இன்னும் அதிக அளவில் மூலதனம் இருக்கக் கூடிய தொழில்களைத் தான் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லாத் தொழில்களையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எப்போதும் அரசாங்கம் சொன்னதில்லை. தொழில் கொள்கையும், பொருளாதாரக் கொள்கையும் திட்டவட்டமாகச் சொல்லப்பட வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். மொனுபலி என்ற பெயரால் தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் செய்யாது தொழில் திட்டத்தைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். இந்த அரசைப் பொறுத்தவரை ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் உள்ள எல்லாத் தொழில்களையும் அரசு ஏற்று நடத்த வேண்டுமென்ற கொள்கையைப் பரிசீலித்து வருகிறோம்.

காகிதத் தயாரிப்புத் தொழில்

* 284 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்மிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்திடும் தொழிற்சாலை அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்டத்தில் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை இருக்கும் வடபாதி மங்கலத்தில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டுள்ளதா? நெல்லிக்